செ.வெ.எண்:464

அரசு செய்தி வெளியீடு — 23.7.2007

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழக அமைச்சரவையின் இருபதாவது கூட்டம் இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு :—

1. தமிழகத்தின் நகர்ப்புறங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய உத்தேசித்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பரிசீலனைக்காக எடுத்துக் கொண்டு அதன் பின்னர் பல ஆண்டுகளாக நில எடுப்புச் சட்டத்தின்படி மேல் நடவடிக்கை எதுவும் அவற்றின் மீது எடுக்காமல், அந்த நிலங்கள் எல்லாம் அப்படியே உள்ளன. அப்படிப்பட்ட இடங்களுக்குச் சொந்தக்காரர்கள், அந்த இடங்களில் கட்டடம் கட்ட வேண்டு மென்றால் அதற்கான திட்ட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து, தடையின்மை சான்று (N.O.C.) பெற வேண்டுமென்ற கட்டாயமான நிலைமை தற்போது இருந்து வருகிறது. இதனால் கட்டு மானப் பணிகளை மேற்கொள்ள முயற்சி செய்வோருக்கு மிகுந்த சங்கடம் ஏற்படுவதுடன் வளர்ச்சிப் பணிகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. எனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வெறும் உத்தேசமாக பரிசீலனைக்கு மட்டும் என்ற அளவில் குறிப்பிட்டு, அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் விடப்பட்டுள்ள நிலங்களில், அவற்றின் சொந்தக்காரர்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கு தற்போது நடைமுறையில் இருந்து வரும் தடையின்மை சான்று (N.O.C.) பெற வேண்டிய கட்டாயத்தை ரத்து செய்வதென்று அமைச்சரவை முடிவு செய்தது.

2. 2011ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்குரிய அளவில் சர்வ தேசத் தரத்திலான அதி நவீன கிரிக்கெட் விளையாட்டரங்கம் ஒன்றை சென்னைக்கு அருகில் கட்டுவதற்காக தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, பழைய மாமல்லபுரம் சாலையில் கருங்குழி பள்ளம் கிராமத்தில் ஐம்பது ஏக்கர் அரசு நிலத்தை சில நிபந்தனைகளுக்குட்பட்டு, முப்பதாண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கு வதென்று அமைச்சரவை முடிவு செய்தது.

3. தனியார் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள சிறு துறைமுகங்கள் மற்றும் எதிர்காலத்தில் அமையவிருக்கும் சிறு துறைமுகங்களின் வசதிகளை முழுமையான அளவில் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் – தற்போது குறிப்பிட்ட பொருட்களை மட்டுமே அந்தத் துறைமுகங்களில் கையாள வேண்டும் என்பதற்கு மாறாக – வணிக ரீதியிலான சரக்குகளையும் கையாள அனுமதிக்கலாம் என்று அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.

வெளியீடு:- இயக்குநர், செ.ம.தொ.து, சென்னை-9